March -2005

இதழ் –02

புதுமை

உலக நடப்புக்கள்...

பொது அறிவுத்துளிகள்...

கட்டுரை, கவிதைகள்...

சிறுகதைகள் மற்றும் துணுக்குகள்...

விலை 25/-

இருமாதமொருமுறை வெளிவரும் இதழ்

புதுமை' :-
இருமாதமொருமுறை
வெளிவரும்
இதழ் -02

"Puthumai "
(Tamil Monthly March. 2005)

ஆசரியர் :-
Mrs. Sumaiya Rasmy

கனணி வடிவமைப்பு :-
-Rifnas Graphics -
No: 67 Yonakapura
Dickwella.
Tel :041-225164/ 0776-324460

தொடர்புகளுக்கு :-
'புதுமை'
Paper House
Water Tank Road,
Dickwella.
041-2255459

விலை : 25/-

புதுமை.. உங்கள் சஞ்சிகை,
உங்கள் வழிநடாத்தல்
உங்கள் வளர்ச்சி
உங்கள் கண்குளிர்ச்சி

ஆசிரியரின் இதயத்திலிருந்து ...

நேசமிக்க வாசகர்கர்களே !

அளவிலா அருளும் நிகரிலா அன்பும் கொண்ட எல்லாம் வல்ல இறைவன் துணை கொண்டு ஆரம்பிக்கிறேன்.

எனக்கு இதழ் – 02 யும் வடிவமைக்க சகல சக்தியையும் ஆற்றலையும் தந்த வல்ல இறைவனுக்கே சர்வ புகழும்.

இச்சஞ்சிகை சில விடயங்களை தாங்கி வந்தாலும் உங்களின் ஒத்துழைப்பினாலும் ஆதரவினாலுமே எதிர்காலத்தில் வளர்ந்து சுடர்விடும்.

அன்பின் வாசகர்களே ! இந்த நீண்ட காலத்திட்டத்தினை மென் மேலும் வளர்வு பெறுவதும், மடிந்து கோவதும் உங்கள் ரசனைகளிலும், ஆர்வங்களிலும் தங்கியுள்ளது. எனவே இந்த சஞ்சிகைத் தொடருக்கு உங்கள் ஆக்கங்களையும், விமர்சனங்களையும், மேலும் ஆலோசனைகளையும், திறமை மிக்க நற்படைப்புக்களையும் அனுப்பி வைத்து, தலைமுறை சமுதாயத்துக்கு நல் வழிகாட்டியுள்ள ஓர் உன்னத சஞ்சிகையாக மாற்றுங்கள். அன்பின் ஆசான்களே, பெற்றோர்களே, நலன் விரும்பிகளே, நீங்களும் இத்தொடர் இதழுக்கு நல்லாசிகள் தெரிவித்து, குறை நிறைகளை நிறைவுபடுத்தி, நல்லதொரு வளர்சிப்படிக்கு கொண்டு செல்லுங்கள்.

இதை மாணவர்களுக்கும், ஆசரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பாடசாலைகளுக்கும் இடையிலுள்ள ஒரு பாலமாக மாற்றுவோம்.

– நன்றி –

அன்புடன்
ஆசிரியர்.

– எழுதுங்கள்... –

புதியது.. புதுமையானது பயனுள்ளது, சுய ஆக்கம், மொழி ஆக்கம், எழுதி அனுப்புங்கள் பிரசுரமாகும் ..

உள்ளடக்கம்

	தலைப்பு	பக்கம்
01.	உலகின் மிகப் பழமையான வீடு	04
02.	நாடுகளின் பழமொழிகள்	
03.	கரடி சொன்ன செய்தி	
04.	விரலில் அணியும் மோதிரம் தோன்றிய வரலாறு	
05.	வழக்கறிஞரும் வைத்தியரும்	05
06.	தினமும் பன்னிரண்டு	
07.	சிரி - சிரி - சிரி	
08.	பிளாஸ்டிக்கின் வரலாறு	
09.	எடை	
10.	சிரி - சிரி - சிரி	
11.	தற்காப்புக் கலை	
12.	எட்டுப்பாடத்தில் குட்டிக்கவிதை	07
13.	கொஞ்சம் சிரீங்க	
14.	இலங்கையில் மின் உற்பத்தி செய்யும் இடங்கள்	08
15.	பெண்களின் பருவங்கள்	
16.	கல்வி	
17.	உலகிலேயே முதலிடம்	09
18.	மூன்றை அடைய	
19.	இல்லாத செய்திகள்	
20.	**SCHOOL & STUDENT**	10
21.	சிந்தனை முத்துக்கள்	
22.	யப்பான 5 S திட்டமும்	11
23.	நாடுகள் மற்றும் மொழிகள்	
24.	விழாக்கள்	
25.	உங்களுக்குத் தெரியுமா ?	12
26.	புகழ்பெற்ற விளையாட்டுத் திடல்கள்	

இலக்கியம் - தமிழ் புலவர்கள் இயற்றிய நூல்கள்

28. மொழிகளும் சிறப்புப் பெயர்களும் 13
29. மொழிகளின் எழுத்துக்களின் எண்ணிக்கை
30. அவசியமான மூன்று
31. என்னகாரம்
32. ஈயடிச்சான் கொப்பி 14
33. சுயநலம் 15
34. சொக்லெட்
35. கவிதப் பூங்கா 16
36 ஒரே வட்டத்தைச் சேரந்த 12 உடுத்தொகுதிகள் உள்ளன அவற்றின் பெயர்கள் 17
37. ஒரே ஒரு எழுத்து
38. வினோத உயிரினங்கள்
39. மனிதனின் 7 வகை 18
40 ஐபல் கோபுரம்
41. மகாவலித்திட்டத்தின் நீரத்தேக்கங்களும் அவற்றுக்கு உதவிபுரிந்த நாடுகளும்
42. மரத்தில் பூக்காத பூ
43. காலம் பொன்னானது 19
44. பிரதம மந்திரியாக இருந்த பெண்கள்
45. திருடனும் தாயும் 20
46. அனைவரிடமும் அன்பாய் இருங்கள் 21
47. இலங்கையின் எதிர்கட்சித் தலைவர்களும் பெயர்களும் பதவிக்காலங்களும்
48. கட்சிகளும் அவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகளும் 22
49. வறுமை முன்னேற்றத்திற்குத் தடையா ?
50. முல்லாவின் சிரிப்புக்கதை 23
51. கடவுச் சீட்டு அறிமுகமானதெப்படி
52. பழங்களின் வகை 24
53. மாகாணங்களும், தலைநகரும்
54. உதைப்பந்தாட்ட முன்னனி வீரர்களாக தெரிவானோர் விபரம்
55. பழமொழிகள் 25
56. யானைக்கு இத்தனை பெயர்களா ?
57. இதழுக்கு ஒரு நாடு
58. ஆயகலைகள் 64 ஆம் எவை ? 26
59. இங்கிலாந்திடமிருந்து சுதந்திரமடைந்த நாடுகள் 27
60. செல்வமும் வறுமையும் 28
61. நன்றிக்கடன் 29
சிந்தித்து செயலாற்றுங்கள்
63. ஹய்கூ கவிதைகள் 30

உலகின் மிகப்பழமையான வீடு

ஜப்பானில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மனிதர்களுக்கு மூதாதையர்கள் என நம்பப்படுபவர்களால் 50ml ஆண்டுகளுக்கு முன்பு இக்கட்டிடம் கட்டப்பட்டிருக்கலாம் எனக்கூறப்படுகின்றது.

இதை கட்டப்பயன்படுத்தப்பட்ட கல்லாயுதங்களும் அந்தப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பூங்கா ஒன்றை அமைப்பதற்கு நிலத்தை தோன்றி போதே இப்பழைய வீடு வெளிச்சத்துக்கு வந்தது.

இதற்கு முன்பு பிரான்சின் "ரொறா அமற்றா" பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட குடியொன்றே உலகின் மிக வயதான வீடு என நம்பப்பட்டது.

கரடி சொன்ன செய்தி..

குமாரும், பாலனும் நண்பர்கள். குமார் நல்ல குணம் உடையவன். மற்றவர்களுக்கு உதவி செய்யும் பண்புடையவன். பாலவன் நல்லவன் போல நடிப்பவன். தனது சொந்த நன்மைக்காக எதுவும் செய்வான். குமாரிற்கு பாலன் மீது நல்ல நம்பிக்கை. அவன் சொல்வதையெல்லாம் நம்பி விடுவான். ஒருநாள் இருவரும் பக்கத்து ஊரிலுள்ள கோவிலுக்கு செல்ல விரும்பினர். காலையில் புறப்பட்டனர். காட்டுப்பாதையில் பக்கத்து ஊரைநோக்கி நடந்து சென்று கொண்டிருந்தனர். திடீரென்று, உறுமுகின்ற சத்தமொன்று பின்னால் கேட்டதும். திரும்பி பாரத்தால் கரடி அவரிருவரையும் நோட்டமிட்டுத் துரத்துவதை இருவரும் கண்டனர். உடனே பாலன் தன் உற்ற நண்பனை விட்டு விட்டு பக்கத்திலிருந்த மரத்தில் ஏறிக் கொண்டான். குமாரை மறந்து விட்டான். குமார் கரடியிடமிருந்து தப்பிப்பதற்காக ஒருஉபாயம் செய்தான். உடனே நிலத்தில் விழுந்து இறந்தவர் போல நடித்தான். கரடியும் குமாரின் அருகில் வந்து விட்டு, இறந்த உடல்தான் என்று ஊர்ஜிதம் செய்துவிட்டு சென்று விட்டது. பின் பாலன் மரத்திலிருந்து இறங்கி வந்து " கரடி உன்னிடம் என்ன சொன்னது" என்றதும் குமார் ! " நல்ல நண்பர்களுடன் உன் நட்பைத் தொடர்க, அவர்களே ஆபத்தில் உதவி செய்யக்கூடியவர்கள்" என்று கரடி கூறியது என்று சொன்னதும் சுயநலமிக்க பாலன் வெக்கத்தால் தலை குனிந்தான்.

- நாடுகளின் பழமொழிகள்-

அதிர்ஷ்டத்தை காத்திருப்பதும்
சாவுக்காய் காத்திருப்பதும் ஒன்று.
— யப்பான்

"அனுபவம்" அழிவின் முகம் பாரக்கும்
கண்ணாடி.
— அரேபியா

நாளை கிடைக்கும் கோழியை விட
இன்று கிடைக்கும் முட்டை மேலானது.
— அல்பேனியா

ஒருவன் கடைசியாக இழப்பது
நம்பிக்கை
— இத்தாலி

அறிவாளியின் ஒருநாள், முட்டாளின் முழு
வாழ்விற்குச் சமன்.
— அரேபியா

- விரலில் அணியும் மோதிரம் தோன்றிய வரலாறு..

மோதிரம் எப்போது தோன்றிய தென்பதனை குறிப்பிட்டுச் சொல்ல முடியாதுள்ளது. நம் முன்னோர்கள் பல வகை நோய்களை குணமாக்குமுகமாக மோதிரம் அணிந்திருக்கிறார்கள். உரோமர்கள் ஐந்து விரல்களிலும் மோதிரம் அணிந்தார்களாம். பின்னர் அது ஒரு அணிகலனாக, புனைவாக மாறிவிட்டது.

வழக்கறிஞரும் – வைத்தியரும்

உருவர் ஓட்டிச் சென்ற காரும் வைத்தியரொருவர் ஓட்டிச் சென்ற காரும் மோதிக் கொண்டன. தனது காரிலிருந்து இறங்கிய வைத்தியர் சிறிது அதிர்ச்சியுள்ளவர் போல காணப்பட்டார். அவரை வழக்கறிஞர் "நீங்கள் நன்றாக அதிர்ச்சியுஅடைந்திருக்கிறீர்கள். களைப்புத்தீர ஏதாவது அருந்தினால் நல்லதல்லவா ?" என்று கனிவோடு கேட்டார் வைத்தியரின் பதிலுக்கு காத்திராமல் அவர் தனது காரிலிருந்த தனது ஒரு போத்தலை வெளியே எடுத்து அதிலிருந்ததை ஒரு டம்ளரில் ஊற்றி " இதோ கொஞ்சம் விஸ்கி குடியுங்கள்". உற்சாகம் வந்து விடும். என்று கூறியவாறு அவரிடம் கொடுத்தார்.

ஒன்றும் பேசாமல் அதை வாங்கி அருந்திய வைத்தியர் " மிக்க நன்றி" அதில் நீங்களும் கொஞ்சம் குடித்தால் நல்லதுதானே"என்றார். "இல்லை பொலீஸுக்கு போன பண்ணியிருக்கிறேன் அவர்கள் வந்து விசாரணை நடத்திவிட்டுப் போகட்டும் அதன் பின்னர் நான் குடித்துக்கொள்ளலாம் என்றார் வழக்கறிஞர்

அரும்புக்கு – நன்றி

- தினமும் பண்ணிரெண்டு -

✣ 01. மகிழ்ச்சியாக இருப்பதற்குஉங்களது மனதைத் தயார் நிலைப்படுத்துங்கள். காரியங்களில் இன்பம் காணப் பழகிக் கொள்ளுங்கள்.

✣ 02. உங்களது சூழ்நிலைகளை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எல்லோருமே எல்லாவற்றையும் கொண்டிருப்பதில்லை. ஒவ்வொருவரும் வாழ்வின் இன்பத்துடன் கலந்த ஏதோ ஒரு வகை மனத்துயரையும் கொண்டுள்ளனர். கண்ணீரையும் விஞ்கம் சிரிப்பை உண்டாக்குவதே இதற்கான யுத்தி.

✣ 03. உங்களை மிகவும் கடுமையானவர்களாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். மற்றவர்களுக்கு நிகழும் துரதிஷ்டங்களிலிருந்து உங்களை ஏதோ ஒரு வழியில் பாதுகாத்துக் கொள்ள வெண்டும் என்று எண்ணாதீர்கள்.

✣ 04 ஒவ்வொருவரையும் நீங்கள் மகிழ்ச்சிப்படுத்த முடியாது. விமர்சனம் உங்களைக் கவலைப்படுத்த அனுமதிக்காதீர்கள்.

✣ 05 உங்களது அயலவர்கள் உங்களது வாழ்கை நியமங்களை(வாழ்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு நெறிகளை) நிரணயித்துக் கொள்ள அனுமதிக்காதீர்கள். நீங்கள் நீங்களாகவே இருங்கள்.

✣ 06 நீங்கள் செய்வதில் மகிழ்ச்சியடையும் காரியங்களைச் செய்யுங்கள். ஆனால் கடனிலிருந்து விலகி விடுங்கள்.

✣ 07 தொல்லைகளை வலிந்து பெற்றுக் கொள்ளாதீர்கள். கற்பனையான சுமைகள் உண்மையான சுமைகளை விட கடினமானதாக உள்ளன.

✣ 08 வெறுப்பானது ஆத்மாவை நச்சுத்தன்மையாக்குவதால் பகைமைகளை அல்லது விரோதத்தை நினைவில் பேணாதீர்கள். உங்களைத் துன்பப்படுத்தும் மனிதர்களை விளக்கிக்கொள்ளுங்கள்.

✣ 09 அதிகளவு ஆர்வங்களை கொண்டிருங்கள். உங்களால் பயணம் செய்ய முடியாவிடின் புதிய இடங்களைப் பற்றி வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

✣ 10 நடந்து முடிந்தவற்றை கிளறாதீர்கள்.(பிரேத பரிசோதனைகளைச் செய்யாதீர்கள்.)மனத்துயரங்களையும். தவறுகளையும் நினைத்து நினைத்து உங்களது வாழ்கையை வீணடித்து விடாதீர்கள்.ஒரு போதும் கடினமான வேலைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத ஒருவராக இருந்து விடாதீர்கள்.

✣ 11 உங்களை விடவும் குறைந்த செல்வம் உடையவர்களுக்கு நீங்கள் செய்ய முடிந்ததை செய்யுங்கள்.

✣ 12 ஏதாவது ஒன்றில் அலுவலாக இருங்கள். அலுவலாக இருக்கும் ஒருவருக்கு கவலையாக இருப்பதற்கு நேரமே கிடையாது.

(ரொபெட் லூயிஸ் ஸ்டீவன்சனின் தத்துவக் கோட்பாடாகும்.)தமிழாக்கம் –T.M. கனிவண்ணன்

சொய்சாபுரம் தகவல் மூலம் – The Speaker's Quite By Roy B.Zuck

பிளாஸ்டிக் தோ

இன்றைக்கு 135 வருடங்களுக்கு முன்னரே பிளாஸ்டிக் பற்றி விஞ்ஞானிகள் தெரிந்து கொண்டனர். மரம், உலோகம், இறப்பர், தோல், தந்தம், ஆகிய மூலப் பொருட்கள் அக்கால பாவனைக்கெனத் தாராளமாக கிடைத்திருந்தன. இதனால் பிளாஸ்டிக்கின் தேவை, பாவனை பற்றி மக்கள் அத்தனை ஆர்வம் காட்டியிருக்கவில்லை. எனினும் தந்தந்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோதுதான், தந்தத்தை ஒத்த மாற்றுப் பொருளொன்றை கண்டுபிடிக்க வேண்டிய தேவை உணரப்பட்டு அதற்கு மாற்றீடாக ஒன்றை கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசு தருவதாகவும் அறிவித்தார்கள். ஜோன் ஹியாட், அவர் சகோதரர் இஸையாஹியாட் ஆகியோர் ஆராய்ச்சி மேற்கொண்டு கண்டுபிடிக்கப்பட்டதுதான் "செலுலோய்ட்" இதை 1870 இல் அவர்கள் உற்பத்திப்பதிவும் செய்து கொண்டார்கள். செலுலோய்ட் இல் பல குறைபாடுகள் இருந்தன. எனினும் இதன் கண்டுபிடிப்பானது மேலும் பல செயற்கை பொருட்களைச் செய்ய ஏனைய விஞ்ஞானிகளை ஊக்கங்கொள்ளச் செய்தது. 1907இல் லியோ பெக்லன்ட் பெனோலிக் என்பவர் பிளாஸ்டிக்கைக்கு கண்டு நடந்தார். அதன் பின்னரே பிளாஸ்டிக் கலைகள் தாராளமாக கண்டுபிடிக்கப்பட்டன.

சிரி..சிரி..சிரி..

ஆசரியர் — ஒரு வேலையை ஒரு பெண் 2 நாட்களில் முடிப்பாள். அதே வேலையை 2 பெண்கள் எத்தனை நாட்களில் முடிப்பார்கள்..?

மாணவன் — "இரண்டு பெண்கள் சேர்ந்தால் எங்க சேர் வேலை நடக்கும் "

கலக்கிற மச்சி....

சிரி..சிரி..சிரி..

பணக்காரர் — டாக்டர் உங்கள் புதுமையான சிகிச்சையினால் தான், நான் இன்று இவ்வளவு பணக்காரனாக இருக்கிறேன். அவர் சொன்னார்.

டாக்டர் — ஆனால் ! நான் உங்களுக்கு ஒரு நாளும் வைத்தியம் செய்யவே இல்லையே..

பணக்காரர் — நீங்கள் வைத்தியம் செய்தது எனது மாமாவுக்கு, மாமா காலமாகி விட்டார். அவரின் சொத்துக்கள் எனக்கு வந்து சேர்ந்துவிட்டது.

எடை

சூரியனின் எடை	1680 kg	செவ்வாமின் எடை	22.8 kg
வெள்ளியின் எடை	51.6 kg	வியாழனின் எடை	159 kg
சந்திரனின் எடை	0.987kg	யுரேனஸின் எடை	57.6 kg
புதனின் எடை	21.6 kg	நெப்டியூனின் எடை	60.0 kg

தற்காப்புக்கலை

- குங்பூ
- கராட்டே
- ஜூடோ
- கென்டு
- அய்கிடோ
- ஜிகம்போ
- நகினடா
- படோஜொட்சு
- ஜோஜட்சு
- கென்ஜட்சு
- சூஜட்சு
- பூஜட்சு
- ஜூஜட்சு
- ஜெட்டிசூட்க
- குசாரிகமாஜட்சு
- நிபோன்கெம்போ
- கியூடோ

இவை அனைத்தும் தற்காப்புக்கலை விளையாட்டுக்களே

எட்டுப்பாடத்தில் குட்டிக்கவிதை

கலையை	கற்று	கலைஞனாக திகழ்ந்திடு
தமிமினைக்	கற்று	தன்னை அறிந்திடு
கணிதத்தினைக்	கற்று	கல்விமானாய் விளங்கிடு
சமூகக்கல்வியை	கற்று	சமுதாயத்தை அறிந்திடு
விஞ்ஞானத்தை	கற்று	விண்ணில் பறந்திடு
ஆங்கிலத்தை	கற்று	ஆர்வத்துடன் பேசிடு
இஸ்லாத்தைக்	கற்று	இறைவனை வணங்கிடு
வரலாற்றறைக்	கற்று	வாழ்வினைப் பரிந்திடு
விவசாயத்தைக்	கற்று	விளைவினைப் பெருக்கிவிடு

கொஞ்சம் சிரீங்க..

தாய் — ஏன்டி.. அந்தப் பையனுக்கு லவ் லெட்டர் (Love Letter) எழுதி அனுப்பினியாமே....

மகள் — இல்லை, மம்மி நான் டயிப்(Type) பண்ணித்தான் அனுப்பினேன்.

ஒருவர் — அந்த நோயாளியை மட்டும் ஏன் டாக்டர் எட்ட நின்று பரிசோதனை பன்றாரு ..?

மற்றவர் — அந்த நோளாளிக்கு நெருப்புக்காய்ச்சலாம் டாக்டருக்கு தொற்றுக் கொள்ளுமெங்கிற பயம்..

கொக்கரகோ குமாரங்கோ....

இலங்கையின் மின் உற்பத்தி செய்யும் இடங்கள்

விக்டோரியா

கொத்மலை

ரந்தனிகலை

கெனியோன்

போவதென்ன

உடவளவை

லக்ஷபான

ரன்தம்பே

உக்குவளை

களனிதிஸ்ஸ

இங்கினியாகல

புதுமை

பொது அறிவுக் களஞ்சியம்,

எண்ணற்ற அறிவுகளை சுமந்து வரும் சஞ்சிகை

பெண்களின் பருவங்கள்

பேதை	5	வயதுக்கு	கீழ்
பெதும்பை	10	வயதுக்கு	கீழ்
மங்கை	16	வயதுக்குக்	கீழ்
மடந்தை	25	வயதுக்கு	கீழ்
அரிவை	30	வயதுக்கு	கீழ்
தெரிவை	35	வயதுக்கு	கீழ்
பேரிளம் பெண்	45	வயதுக்கு	கீழ்
மூதாட்டி	60	வயதுக்கு	கீழ்
கிழவி	65	வயதுக்கு	கீழ்

- கல்வி -

காலத்தால் அழியாதது	கல்வி
உலகினிலே நிலைத்து நிற்பது	கல்வி
காலத்தால் கற்கப்படுவது	கல்வி
உலகில் வழுவாக பேசப்படுவது	கல்வி
உண்மையான உறுதிமொழி	கல்வி
உள்ளத்தை கவர்வது	கல்வி

- மூன்றை அடைய... -

இந்த மூன்றையும் அடைய முயலுங்கள்

☆ கல்வியறிவு

☆ கண்ணியம் ☆ ஒழுக்கம்

இந்த மூன்றையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்.

☆ உடல்

☆ ஆடை ☆ எண்ணம்

இந்த மூன்றுக்கு தயாராக இருங்கள்.

☆ மரணம்

☆ வீழ்ச்சி ☆ துயரம்

உலகிலேயே முதலிடம்

மலர் உற்பத்தி	ஒல்லாந்து
ஏலம்	கௌதமாலா
காய்கறிகள்	சீனா
தேங்காய்	பிலிப்பைன்ஸ்
கொக்கோ	ஐவரிகோஸ்ட்
தோடம்பழம்	பிரேசில்
நிலக்கடலை	இந்தியா
நிலக்கரி	அமெரிக்கா
அப்பிள் பழம்	அவுஸ்திரேலியா
பட்டு	யப்பான்
சீனி	கியூபா
பார்லி	ரஸ்யா
செம்பு	சிலி
வாழைப்பழம்	இந்தியா
தகரம்	மலேசியா

Number 01

சிரி...சிரி...சிரி

தம்பி — தண்டச்சோறு என்று சொல்றாங்களே அப்பிடின்னா என்னண்ணே..?

அண்ணன் — வேலைபார்க்காம வீட்டில சும்மா ஓசியில திண்டிக்கிட்டிருக்கிறாங்களே.. அவங்களுக்குத்தான் அப்பிடிச்சொல்றது..

தமபி — ஓ.. அதுதான் உனக்கு எல்லாரும் சொல்றாங்களா..!

இல்லாத செய்திகள்

- பறவைகளுக்குப் பற்கள் இல்லை
- காண்டாமிருகத்தின் கொம்பில் எழும்புகள் இல்லை
- குயில் குளிர்காலத்தில் கூவுவதில்லை
- சுண்டெலிக்கு வியர்ப்பதே இல்லை
- பல்லி நீர் குடிப்பதே இல்லை

- கங்காரு மற்ற விலங்குகள் போல நாலுகால்களில் நிற்பதே இல்லை
- கழுகு எதையும் கொன்று தின்பதில்லை
- ஒட்டகத்திற்கு பித்தப்பை இல்லை
- குளிர்காரத்தில் அந்தாடிக்காவில் ஒரு உயிரினமும் வாழ்வதே இல்லை

SCHOOL



S-	Sincerity	உண்மை
C-	Capacity	ஆற்றல்
H-	Honesty	நேர்மை
O-	Obedience	கீழ் படிவு
O-	Orderliness	ஒழுங்கு
L-	Learning	கற்றல்

STUDENT

S-	Searcher	தேடுபவர்
T-	Truth Full	உண்மையாளர்
U-	Ultra	தீவிரமானவர்
D-	Disple	பின்பற்றுவர்
E-	Efficient	ஊக்கமுடையவர்
N-	Noble	உயர்குணங்கள்
T-	Trust Worthy	நம்பகத்தன்மை உடையவர்

முத்துக்கள்

✍ ஏழையின் வாழ்வில் பங்கு கொண்டாலே எழிமையின் மகிமை புரியும்

✍ பணம் போனால் பெற்றுக் கொள்ளலாம், ஆனால் மானம் பொனால் ஒரு காலமும் பெற முடியாது என்பதை மனதில் ஆழப்படுத்தி கொள்

✍ உன்னைப் புண் படுத்துவது எதுவென்று தெரிந்தால் மற்றவர்களைப் பண்படுத்துவது எதுவென்று உனக்குத் தெரியவரும்

✍ பேசும் வார்தையை அளந்து பேசிவிட்டு துன்பப்படுவது குடித்த நீரை வெளியே எடுப்பது பொன்றாகும்

✍ பெண்களின் ஒழுக்கம், நடைமிலும் பேச்சிலும் உள்ளது. அண்களின் ஒழக்கம், பண்பிலும் அன்பிலும் உள்ளது.

✍ இரக்கம் இல்லாதவனுடன் நட்புக் கொள்வது போசாக்கில்லாத உணவை உண்பது போலாகும்

✍ பெரும் பதவிமில் இருந்தும் ஏழையை பார்க்காதவன் பெற்ற தாயுக்கு கருணை காட்டடாதவன் போலாகும்

✍ அறிவுக்குள்ள மதிப்பும் சிறப்பும் பணத்திற்கு கிடையாது

யப்பானும் 5's திட்டமும்
JAPAN & 5'S PROGRAMME

SEIRI	–	செய்றி	SEIRI தேவையானதை வைத்துக்கொண்டு தேவை இல்லாததை உடனே அப்புறப் படுத்தல்
SEITON	–	செய்டோன்	SEITON துவையானதை மட்டும் வைத்திருத்தல்
SEISO	–	செய்சோ	SEISO உடனடியாக துப்பரவு செய்தல்
SEIKETSO	–	செய்கெட்சோ	SEIKETSO தொடர்ச்சியான தரங்களைப் பேணுதல்
SHITSUKE	–	செட்சூகி	SHITSUKE – ஒழுங்கு

நாடுகள் மொழிகள்

மாலை தீவு	திவெகி
சீனா	மண்டரியன்
நெதர்லாந்து	டச்சு
போலாந்து	பொலிஷ்
சுவீடன்	சுவிடிஷ்
கொரியா	கொரியன்
துருக்கி	துருக்கிஸ் /குர்திஷ்
நோர்வே	நோர்வேஜியன்
இத்தாலி	இத்தாலியன்
ஹங்கேரி	ஹங்கேரியன்
புரூனை	மலே, ஆங்கிலம்
பெல்ஜியம்	பிரேஞ்சு

விழாக்கள்

1 – ம் வருடம்	– காகித விழா
2 – ம் வருடம்	– பருத்தி விழா
3 – ம் வருடம்	– தோல் விழா
4 – ம் வருடம்	– பூபாள விழா
5 – ம் வருடம்	– மர விழா
6 – ம் வருடம்	– சரக்கரை விழா /கற்கண்டு/ இரும்பு
7 – ம் வருடம்	– கம்பளி /செம்பு
8 – ம் வருடம்	– வெண்கல விழா
9 – ம் வருடம்	– மண்கலச விழா
10 – ம் வருடம்	– தகர விழா
11 – ம் வருடம்	– எஃகு விழா
12 – ம் வருடம்	– லைனன் விழா
13 – ம் வருடம்	– லேஸ் விழா
14 – ம் வருடம்	– தந்த விழா
15 – ம் வருடம்	– படிக விழா
20 – ம் வருடம்	– பிங்கான் விழா
25 – ம் வருடம்	– வெள்ளி விழா
30 – ம் வருடம்	– முத்து விழா
40 – ம் வருடம்	– மாணிக்க விழா
50 – ம் வருடம்	– பொன் விழா
60 – ம் வருடம்	– வைர விழா
75 – ம் வருடம்	– பவள /அமுத
100 – ம் வருடம்	– நூற்றாண்டு

உங்களுக்குத் தெரியுமா...?

ஐக்கிய அமெரிக்காவில் விமானிகளுக்கு லைசன்ஸ் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்ட போது ஓர்வில் ரைட்டை கௌரவிக்கும் முகமாக முதலாம் இலக்க லைசன்ஸ் அவருக்கே வழங்கப்பட்டது.

1990 இல் மிலியன் நகரங்களாக உலகில் 11 இடங்கள் இருந்தன. அவை எவை?

★லண்டன் ★மொஸ்கொவ் ★ கல்கத்தா
★பாரிஸ் ★ஸெண்பீட்டர்ஸ் ★பிலடல்டியா
★பெர்லின் ★யேக் ★வியன்னா
★நிவ்யோர்க்.

மெட்ரோபோலியன் எனப்படும் பெரு நகரங்களாக உலகில் 6 உண்டு அவை எவை ? இங்குள்ள சனத்தொகை 1 கோடி

★நிவ்யோரக் ★ கயாபோலோ ★சங்காய்
★புவனஸ் ★அயஸ் ★மெக்ஸிகோ
★டோக்யோ

புகழ்பெற்ற விளயாட்டுத் திடல்கள்

கெத்தாராம	—	கிரிக்கட்
வெம்பிளி	—	இங்கிலாந்து உதைப்பந்து
எமிற்றன்	—	இங்கிலாந்து குதிரைப் பந்து
ஹார்பிங் ஹாம்	—	போலோ
எப்பசன்	—	குதிரைப்பத்தியத் திடல்
பிளேஸ்ஹீத்	—	உதைப்பந்தாட்டம்
சேப்பாக்கம்	—	சென்னை, இந்தியா
ஈடன் கார்டன்	—	கல்கத்தா
கிரின் பார்க்	—	(கிரீன் பார்க்) கான்பூர் இந்தியா
ஓவல்	—	லண்டன்

இலக்கியம்
புலவர்கள்-நூல்கள்

திருவள்ளுவர் — திருக்குறள்
கம்பர் — கம்பராமாயணம்
இளங்கோவடிகள் — சிலப்பதிகாரம், முத்தமிழ்காவியம்
காளமேகப் புலவர் — திருவானைக்காஉலா
ஓட்டக் கூத்தர் — ஈட்டி 7θ இரத்தம்
புகழேந்திப் புலவர் — நளவெண்பா

ஔவையார் — ஆத்திசூடி கொன்றை வேந்தன்
தொல்காப்பியர் — ஆறறிணைத் தந்தவர்
உமருப்புலவர் — சீராப்புராணம்

மொழிகளும் சிறப்புப் பெயர்களும்

சிறப்புப் பெயர்		மொழிகள்
உருது	—	கவிதை மொழி
தமிழ்	—	பக்தி மொழி
அரபு	—	சுவன மொழி
ஆங்கிலம்	—	வணிக மொழி
இத்தாலி	—	இசை மொழி
கிரேக்கம்	—	சட்ட மொழி
பிரேஞ்சு	—	காதல் மொழி
சிங்களம்	—	வலை மொழி

எழுத்துக்களின் எண்ணிக்கை

இத்தாலி 20
ஆங்கிலம் 26
ஜேர்மனி 26
பிரான்ஸ் 26
அரபு 28
துருக்கி 28
பாரசீகம் 31
சிங்களம் 56
தமிழ் 30

அவசியமான மூன்று

பாராட்டப்பட வேண்டியவை

அழகு , அறிவு

குணம்

விரும்பப்பட வேண்டியவை

நேர்மை, அன்பு,

கடின உழைப்பு

விலக்கப்பட வேண்டியவை

சோம்பல், புறங்கூறு,

பொய்

மதிக்கப் பட வேண்டியவை

உற்சாகம், அஞ்சாமை,

திருப்தி

என்னகாரம்

பதவியல் இருப்பவர் பண்ணும்
காரம் — அதிகாரம்
பெண்களுக்கு பிரியமான
காரம் — அலங்காரம்
பசிக்குத் தேவையான
காரம் — ஆகாரம்
பாவத்திற்குத் தேடும்
காரம் — பரிகாரம்
பார்வைக்கு இழகாயில்லாத
காரம் — விகாரம்
விருந்தோம்பி செய்யும்
சாரம் — உபசாரம்
கணவனின் மறுபாதி இந்தக்
சாரம் — சமச்சாரம்
அன்றாட வாழ்விற்கு அவசியமான
சாரம் — மின்சாரம்
கவலை தரும்
சாரம் — விசாரம்

Right Way Right Choice

புதுமை

சுயடிச்சான் கொப்பி...!

ஜானியும், ஸோனியும் நெருங்கிய நண்பர்கள். ஆனால் ஜானி கொஞ்சம் மக்கு. ஸோனி பயங்கர புத்திசாலி. ஜானி ஒரு சாதாரண ஹோட்டல் ஒன்றில் வேலை செய்தான். ஸோனி ஒரு ஏற்றுமதி நிறுவனத்தில் வேலை செய்தான். இருவருக்கும் தாங்கள் ஒரே இடத்தில் வேலை செய்ய வேண்டும் என நீண்ட நாள் ஆசை. இதனை தாங்கள் சந்திக்கும் நாட்களெல்லாம் சொல்லி கவலைப்பட்டுக் கொள்வார்கள். ஒரு நாள் ஜானிக்கு ஐடியா தோன்றியது. இவன் ஸோனியிடம் சொன்னான், நண்பா ! நாம் இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்ய வேண்டுமானால் அதற்கு ஒரு வழி இருக்கிறது. இப்போது நாம் செய்து கொண்டிருக்கும் வேலையை விட்டு விடுவோம். ஒரு புதிய கம்பனிக்கு விண்ணப்பம் போடுவோம், எம்மை நேர்முகப் பரீட்சைக்கு கூப்பிடுவார்கள். அப்போது அந்த நேர்முகப்பரீட்சைக்கு நீ முதலில் போக வேண்டும். அங்கே என்ன கேள்விகள் கேட்கிறார்களோ அந்தக் கேள்விகளையும் அதற்கான பதில்களையும் வந்து என்னிடம் சொல்லு. நான்அடுத்ததாக சென்று அதே பதில்களைச் சொல்கிறேன். இருவருக்கும் அங்கே வேலை கிடைக்கும் என்றான்.

ஸோனிக்கு இது நல்ல ஐடியாவாகப்பட்டது. இருவரும் புதிய கம்பெனியொன்றில் வெலைக்கு விண்ணப்பித்தார்கள். நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு வந்தது. முதலில் ஸோனி நேர்முகப் பரீட்சைக்குப் போனான். அங்கே அவனிடம் 03 கேள்விகள் கேட்கப்பட்டன.

கேள்வி — 01 இலங்கைக்கு எப்போது சுதந்திரம் கிடைத்தது.?
ஸோனி பதில் — நீண்ட காலமாக பலர் முயற்சி செய்ததால் 1948 இல்

கேள்வி — 02 தற்போதைய அமெரிக்கா ஜனாதிபதி யார் ?
ஸோனி பதில் — 5 வருடத்துக்கு ஒருமுறை ஒவ்வொருவரும் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். தற்போது ஜோர்ஜ் புஷ்.

கேள்வி — 03 தற்போதைய இலங்கை சனத்தொகை என்ன ?
ஸோனி பதில் — ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. சரியான தகவல் இன்னும் கிடைக்கவில்லை.

பதில்களைச் சொல்லிவிட்டு ஸோனி வெளியே வந்து ஜானியிடம் கேட்ட கேள்விகளையும், விடைகளையும் சொன்னான். அடுத்து ஜானியின் முறை.நேர்முகப்பரீட்சை நடைபெரும் மண்டபத்திற்கு சென்றான். அவனிடம் 03 கேள்விகள் கேட்கப்பட்டது.

கேள்வி — 01 நீ எப்போது பிறந்தாய் ?
ஜானி பதில் — நீண்ட காலமாக பலர் முயற்சி செய்ததால் 1948 இல்

கேள்வி — 02 உனது தந்தை யார் ?
ஸோனி பதில் — 5 வருடத்துக்கு ஒருமுறை ஒவ்வொருவரும் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். தற்போது ஜோர்ஜ் புஷ்.

கேள்வி — 03 உனக்கு என்ன பைத்தியமா ?
ஸோனி பதில் — ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. சரியான தகவல் இன்னும் கிடைக்கவில்லை.

மக்கு...மக்கு...

சுயநலம்

விமானம் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தது. இதில் ஒரு பாடசாலை மாணவன், கிறிஸ்தவப் பாதிரியார், அரசியல்வாதி ஆகிய மூவரும் பயணம் செய்து கொண்டிருந்தனர். திடீரன விமானி "பிளைட் தீப்பிடித்துவிட்டது. இரண்டு பாரசூட்டுக்கள் தான் இருக்கின்றன. 3 நிமிடத்தில் எப்படியோ குதித்துத் தப்பி விடுங்கள். என்று எச்சரித்தனர்.

உடனே அரசியல்வாதி தனக்கு மிக அவசர வேலை இருப்பதாகக் கூறி ஒன்றை எடுத்துக் குதித்து விட்டார். அப்போது கிறிஸ்தவ பாதிரியார் மாணவனிடம் சொன்னார். "எதிர்காலம் உன்னுடைய கைமில், வாழ்ந்து சாதனை படைக்கவேண்டியது நீதான் ஒரு பாரசூட்டை எடுத்து குதித்து தப்பிவிடு. என்றதும்

உடனே மாணவன்" அரசியல்வாதி அவசரத்தில் எனது School Bag (ஸ்கூல் பேக்கை)பாரசூட் என்று எண்ணி அதை எடுத்து குதித்துவிட்டார். என்று சொன்னான்.

பின் இருவரும் இரண்டு பாரசூட்டில் இறங்கி தப்பித்துக் கொண்டர்கள். சுயநலமிக்க அரசயல்வாதி எதையும் உருப்படியாகச் செய்வதில்லை என்பதற்கு இந்த சிரிப்புத் துணுக்கு நல்ல உதாரணம்தான்.

சொக்லெட்

கொக்கோ விதைகிளிலிருந்து சொக்லட் தயாறிக்கப்படுகின்றது. கொக்கோ மரங்கள் அமெரிக்காவில் வளர்கின்றன. 3000 ஆண்டுகளுக்கு முன் அமெரிகா மாய மக்கள் கொக்கோவை கோப்பி போலக் குடித்தனர். கொக்கோவை தண்ணீரில் கலந்து பருகினார்கள். ஒரே கசப்பாகமிருக்கும் இதற்கு "தேவநீர்" என்று பெயர்.

400 ஆண்டுகளுக்கு முன் கொக்கோ ஐரோப்பாவில் பமிரிடப்பட்டது. பாலில் கலந்து கோப்பி கோலக் குடித்தார்கள். மிளகாய்தூளுக்கு பதிலாக சீனியை சேர்த்தார்கள். இனிப்பாக இருந்தது. அதிலிருந்து இனிப்புச் செய்தார்கள். "சொக்லெட்" என்று பெயர் பெற்றது.

"சொக்லெட்" என்பது மெக்ஸிகோவின் சொல். சொக் என்றால் கொக்கோ லேட் என்றால்

தண்ணீர் . தண்ணீரில் கரைந்த கொக்கோ என்று பொருள் இப்பே பாது பாலில் கரைக்கப்படுகின்றது. பாணங்கள் தீண்பண்டங்களிலும் கலக்கப்படுகின்றது.

கவிதைப் பூங்கா

சுனாமி

சுதந்திரப் புருசர்களை
அந்த விடியல்
சோக வளைகளில்
சூழ வைத்தது.

அந்தோ !
ஒரு நிமிடத்தில்
இராட்சத அலையாய்
உருவெடுத்து,
கண்ணிமைக்கும் நேரத்தில்
உயிர்களை தன் வசமாக்கியது.

ஆழ்கடலும், ஆகாயம்
தொடும் தூரம் தான்.
ஆனால்
அண்மையிலே
ஆக்ரோசமாய்,
பாய்ந்தெழுந்தது,
தொலை தூரத்திலல்ல,
மக்களின் வசிப்பிடத்தில்..

உடல்கள் உயிர்களிழந்தது,
உரிமைகள் சொல்ல
பல உறவுகள்
நிலையிழந்தது,



உடமைகள் சூழிய
உடன் இல்லறங்கள்
இல்லாமல் போனது.

சாதி, மதம்,
குலம் கோத்திரம்,
ஓர் குழிக்குள் புதையுண்டது.

அவலக் குரல்கள்
அதிக குரல் கொடுத்தது,
நினையாத நிஜங்கள் கூட
அரங்கானது,

சோக கீதங்கள்,
இரத்தக் கண்ணீர்கள்,
சிதைவுற்ற உள்ளங்கள்,
அநாதரவற்ற அனாதைகள்,
இவைகள் மட்டுமே
இன்று நிரந்தரம்..

இது கதையல்ல,
நிஜம் என்பது போல்
இவை வார்தையல்ல
இயற்கையின் நிர்கதி..

வாழ்வெனும் சுமைக்குள்
சுனாமி தந்த கனம்,
இன்னும் தீரவில்லை..
காயங்கள் ஆரவில்லை

சுனாமி !
நாங்கள் கண்டிராத
புதிய பாடம்.

அனுபவிக்காத
கடினனுபவம்.
எமை தொற்றிய கொடுர
விச நோய்.
வலி தீராத அதிரடி,
இது இறைவனின் குறித்து
வைத்த நியதியடி.

எம். ரிப்னாஸ் அஹமட்
67 யோனகபுர திக்குவல்லை.

உங்கள் கவிதை ஆக்கங்களையும் கவிதைப் பூங்காவில்
இடம் பெற விரும்பினால் பெயர் முகவரியுடன்
புதுமை சஞ்கிகைக்கு அனுப்பி வையுங்கள்..

ஒரே வட்டத்தைச் சேர்ந்த 12 உடுத் தொகுதிகள் உள்ளன.

அவற்றின் பெயர்கள்.

மேடம் – Arias
இடபம் – Taurus
மிதுனம் – Gemini
கடகம் – Cancer
சிம்மம் – Leo
கன்னி – Virgo
துலாம் – Libra

விருச்சிகம் – Scorpio
தனுசு – Sagittarius
மகரம் – Capricorn
குடும்பம் – Aquarius
மீனம் – Pisces

ஒரே ஒரு எழுத்து

வருபவர்களை வரவேற்கும் எழுத்து	– வா –
வந்தவர்களை விரட்டும் எழுத்து	– போ –
பால் தரும் எழுத்து	– ஆ (பசு) –
பறக்கும் எழுத்து	– கை –
அரியணைமில் அமரும் எழுத்து	– கோ(அரசன்)
இகழும் எழுத்து	– சீ –
கேட்கும் எழுத்து	– தா –
எரியும் எழுத்து	– தீ –
துணிகளை இணைக்கும் எழுத்து	– தை –
மணக்கும் எழுத்து	– பூ –
பெரிய எழுத்து	– மா –
தூக்கும் எழுத்து	– பை –
இதை எழுத உதவும் எழுத்து	– மை –

விநோத உயிரினங்கள்

ஞாபக சக்தி கூடிய விலங்குகள் – யானை

அதிக நீர் அருந்தும் பறவை – புறா

மிகச் சிறிய முட்டை இடும் பறவை – தேன் சிட்டு

சத்தமிடாத விலங்கு – ஒட்டகச் சிவிங்கி

பல்லில்லாத முலையூட்டி – தேவாங்கு

நீல நிற இரத்தத்துடைய கடல் உமிரினம் – நண்டு – இறால்

கடல் நீரைப் பருகும் ஒரே ஒரு பறவை – பென்குயின்

பறக்கும் போதே தூங்கும் பறவை – அல்பட்ராஸ்





மனிதனின் 7 வகை SEVEN TYPE HUMANS

இலட்சிய வாதி – AMBITIONS TYPE

அமைதியானவன் – PLACID TYPE

கவலைப்பட்டுக்கொண்டே இருப்பவன் – WORRIN TYPE

கவலையே கொள்ளாதவன் – CARE FREE TYPE

சந்தேகப்பட்டு இருப்பவன் – SUSPECT TYPE

பிறரைச் சார்ந்திருப்பவன் – DEPENT TYPE

ஆடம்பரப் பிரியன் – FUSSY TYPE

ஐபல் கோபுரம்

பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் 300அ (984 அடி) உயரமான இரும்புக் கோபுரம் ஒன்றுள்ளது. அதனை ஐபல் கோபுரம் என்பர்.

இக்கோபுரத்தைக் கட்டியவர் 1989 இல் அலெக்சாந்தர் கஸ்டாவ் ஐபல் என்பவர்.

இக்கோபுரத்தின் மேல் மூன்று மாடிகள் உள்ளன.

மகாவலி திட்டத்தின் நீர்த் தேக்கங்களும் அவற்றுக்கு உதவி புரிந்த நாடுகளும்

நீர்த்தேக்கம்	நாடு
மாதுறு ஓயா	– கனடா
விக்டோரியா	– இங்கிலாந்து
கொத்மலை	– கனடா
மொறகஹகந்த	– ஜப்பான்
ரந்தனிகல	– மே.ஜேர்மனி

மரத்தில் பூக்காத பூ

மனிதன் புகழும் பூ	என்ன பூ	–	சிறப்பு
மலர்ச்சியால் வரும் பூ	என்ன பூ	–	சிரிப்பு
காலையில் வரும் பூ	என்ன பூ	–	விழிப்பு
சமயலறையில் உள்ள பூ	என்ன பூ	–	அடுப்பு
காரமான பூ	என்ன பூ	–	உறைப்பு
மானம் காக்கும் பூ	என்ன பூ	–	உடுப்பு

காலம் பொன்னானது

சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது அறிவின் கருவூலம்
விளையாட்டுக்கு நேரம் ஒதுக்குங்கள்
அது இளமையின் இரகசியம்
வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது ஞானத்தின் ஊற்று
அன்பு செலுத்தவும், அன்பு செலுத்தப்படவும் நேரம் ஒதுக்குங்கள்
அது மகிழ்ச்சியின் தலைவாயில்
நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்
அது மனச்சுமையின் உராய்வு நீக்கி
கொடுப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது அபிவிருத்தியின் வாசற்படி
உடலுழைப்புக்கு நேரம் நேரம் ஒதுக்குங்கள்
அது ஆரோக்கியத்தின் அருமருந்து
தூக்கத்திற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது உடலின் தேவை

பிரதம மந்திரியாக இருந்த பெண்கள்

- ✔ இலங்கை — ஸ்ரீமாவோ பண்டாரநாயக
- ✔ இந்தியா — இந்திரகாந்தி
- ✔ இங்கிலாந்து — மார்க்கட் தட்சர்
- ✔ பிரான்ஸ் — எடித்திரசன்
- ✔ நோர்வே — குரஹலாம்பூர்க்
- ✔ பாகிஸ்தான் — பெனாசீர் பூட்டோ
- ✔ பங்களாதேஷ் — ஷேக் ஹஸீனா, காளிதாசியா

சிரி ....சிரி .... சிரி..

அப்பா — ஏன்டா ..! அந்த எலியை புடிச்சிக்கட்டு உன் நண்பனுடைய வீட்டுக்கு போராய்..

மகன் — நண்பனுடைய கம்பியூட்டருக்கு மொவுஸ் இல்லையென்று கவலப்பட்டான். அதான் இதக் கொடுத்திட்டு வரலாமென்று போகிறேன்

திருடனும் –தாயும்

முருகன் வயலூர் முருக மூர்த்தி வித்தமிாலயத்தில் 5 ஆம் வகுப்பில் படித்து வந்தான். அவன் ஒரு நாள் பாடசாலைமிலிருந்து ஒரு புத்தகத்தை திருடி வந்தான். தன் தயாரிடம் அதைக் கொடுத்தான். தாயார் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். கெட்டிக்காரப்பிள்ளை புகழந்தாள். அந்த புத்தகததை அயல் வீட்டுப் பிள்ளை ஒன்றிற்கு விற்றாள், கிடைத்த பணத்தில் முருகனுக்குப் பரிசாக அப்பிள் ஒன்றும் வாங்கிக் கொடுத்தாள்.

முருகனுக்குத் தாமின் செயல் ஊக்கமூட்டியது. அவன் சிறிதாக சிறிதாக திருட ஆரம்பித்தான். அப்போதெல்லாம் தாய் அவனைத் தண்டிக்கவில்லை. மென் மேலும் உற்சாகமூட்டினாள். நாளடையில் பெரிய திருடனாகவே மாறிவிட்டான். கடைசியில் அவன் கொள்ளை வழக் கொன் றில் மாட்டிக்கொண்டான். அவனுக்கு நீதிபதி மரணதண்டனை கொடுத்தார்.

குறிப்பிட்ட நாளில் அவனை தூக்கு மேடைக்கு இழுத்துச் சென்றார்கள். ஏராளமான மக்கள் இதைக் காண வீதியில் திரண்டு நின்றார்கள். முருகள் தலை குனிந்தபடி நடந்து வந்தான்.அங்கே நின்ற கூட்டத்தில் அவனது தாயாரும் நின் று கொண்டிரந்தாள். அவள் அழுதுகொண்டு நிற்பதைமுருகள் கண்டான்.

தனது தாயரிடம். விடை பெற்றுக்கொள்ள காவலர்களிடம் அனுமதி கேட்டான். அனுமதி பெற்று தனது தாயரிடம் சென்றான். அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டான். அவளது காதில் ஏதோ இரகசியம் சொல்வது போல் பாசாங்கு காட்டி, அவளது காதை காதை கடித்துத் துண்டாடி விட்டான். தாய் வேதனை பொறுக்காது அலறினாள். மக்கள் இதைக் கண்டதும் கோபம் கொண்டனர். அவர்களைப் பார்த்து முருகள் சொன்னான். "நான் சொல்வதைக் கேளுங்கள். இன்று நான் தூக்குமேடைக்கு செல்வதற்கு இவள்தான் காரணம். முதல் முதலில் பாடசாலைமிலிருந்து பத்தகத்தை திருடி வந்தேன். அப்போது இவள் என்னைக் கண்டிக்கவில்லை. பரிசு தந்து உற்சாகப் படுத்தினாள். என்னை அப்பொழுதே திருத்திமிருந்தால் இன்று இந்த தூக்கு மேடைக்கு வந்திருக்க மாட்டேன்." என்றான் முருகன். அவன் தாய் மௌனமானாள்.

புதுமை
உங்கள் ஆக்கங்களை
எதிர்பாக்கிறது.

விநியோகஸ்தர்கள் தேவை !

புதுமை சஞ்சிகையை உங்கள் பிரதேசங்களிலும் விநியோகிக்க வேண்டுமாமின், இந்த முகவரியுடன் தொடர்பு கொண்டு இச்சஞ்சிகையை பெற்றுக் கொள்ளலாம், வீதி அருகிலுள்ள கடைக்குரியவர்களும் இச்சஞ்கிகையை பெற்றுக்கொண்டு விநியோகிக்கலாம்.

— தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி —

"புதுமை"
Paper House
Water Tank Rd. Dickwella

அனைவரிடமும் அன்யிருங்கள்

யாராவது உங்களோடு கோபத்துடன் பேசினால் இன்புமென்றும் கண்ணீரை அந்த நெருப்பில் ஊற்றுங்கள்.

வாழ்கையின் ஒவ்வொரு நெருக்கடி நிலைக்கும் முகங்கொடுக்க வேண்டும். அப்படியாமின் ஏன் அன்புடன் முகங்கொடுக்கக் கூடாது.

எப்போதும் பணிவு என்னும் ஆடையை அணிந்திருங்கள். அதனால் நீங்கள் மற்றவர்களின் அன்பையும் ஒத்துழைப்பையும் பெறுவீர்கள்.

அன்பு நிறைந்தும் நியாயமாகவும் என்னால் இருக்க முடியாதெனில் நிச்சயமாக என்னில் ஏதோ சக்தி குறைகிறது. உங்களையே பரிசோதித்து அதை நிரப்பிக்கொள்ளுங்கள்.

பொறாமையான அல்லது வெறுப்பான சிந்தனைகள் வந்து சேறும் போது மகிழ்ச்சியை இழந்து விடுகின்றறோம். அன்பும நல்லாசிகளும் நிறைந்த சிந்தனைகள் துாக்கத்தை தீர்த்து வைக்கின்றன.

மரியாதையை பெறும் ஒரே வழி அதனை முதலில் கொடுப்பதாகும்.

உங்கள் சொந்த இயல்பைத்தவிர வேறு எவரும் உங்களைச் சித்திரவதை செய்வதில்லை. ஆகவே உங்கள் இயல்பை இனிமையாகவும் அன்பாகவும் ஆக்கி எல்லோரது அன்பையும் வெல்லுங்கள்.

உங்களது சொந்த வெற்றிமினைப் போன்றே மற்றவர்களது வெற்றியிலும் ஆர்வமாக இருங்கள்.

அன்பாகவும் உண்மையாகவும் இனிமையாகவும் பேசுவதற்கு ஒரு சதம் கூட செலவழிக்க வேண்டியதில்லை.

இலங்கையின் எதிர்கட்சித்தலைவர்களின் பெயர்களும் பதவிக்காலங்களும்.

பெயர்	பதவிக்காலம்	பெயர்	பதவிக்காலம்
கலாநிதி N.M. பெரேரா	1947 — 1952	J.R. ஜயவர்தன	1970 — 1977
S.W.R.D பண்டாரநாயக	1952 — 1956	A. அமிர்தாங்கம்	1977 — 1983
கலாநிதி N.M. பேரேரா	1956 — 1959	அனுர பண்டாரநாயக	1983 — 1988
C.B.D சில்வா	1960	காமினி திஸாநாயக	1994 — 2001
டட்லி சேனாநாயக	1960 — 1964	ரத்னசிறி விக்கிரமநாயக	2002
சிறிமாவோ பண்டாரநாயக	1965 — 1970	மஹிந்த ராஜபக்ஷ	2002 இன்று வரை

கட்சிகளும் அவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகளும்

கட்சிகள்	ஆண்டுகள்.	கட்சிகள்	ஆண்டுகள்.
தொழிற் கட்சி	1920	அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்	1949
இலங்கை சமசமாஜக் கட்சி	1935	ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி	1949
ஐக்கிய தேசிய கட்சி	1946	தமிழர் விடுதலைக் கூட்டணி	1976
இலங்கை கமியூனிஸ்ட் கட்சி	1943	மஹஜன அக்ஸத் பெரமுன	1955

வறுமை முன்னேற்றத்திற்கு தடையா ?

- ஆப்ராகம் லிங்கன் — ஏழை விறகு வெட்டியின் மகனாக இருந்த அமெரிக்காவின் ஜனாதிபதியானார்.
- ஜோசப் ஸ்டாலின் — ஏழை செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன் பின்னாளில் சோவியத் நாட்டின் தலைவராக உயர்ந்தார்.
- தோமஸ் அல்வா எடிசன் — வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த படகு செய்பவரின் மகன். விஞ்ஞானியாக வளர்ந்து அளப்பெரிய சாதனைகள் புரிந்தார்.
- வில்லியம் ஷேக்ஸ்பியர் — குதிரை லாய மேற்பார்வையாளரின் மகனாகப் பிறந்து அமர காவியங்களைப் படைத்த இங்கிலாந்தின் இணையற்ற நாடகாசிரியராக உயர்ந்தவர்.
- பிராங்களின் (பென்ஜமீன்) — ஒரு ஏழை மெழுகுவர்த்தி வியாபாரியின் மகன். பின்னாளில் உலகம் போற்றும் விஞ்ஞானியாகத் திகழ்ந்தவர்.
- ஹென்றி போர்ட் — பண்ணைத் தொழியலாளியின் மகனாகப் பிறந்து உலகம் போற்றும் விஞ்ஞானியாக மாறியவர்.
- கரிபால்டி — இத்தாலியில் ஒரு மீனவரின் மகனாகப் பிறந்து பெரும் புரட்சியை ஏற்படுத்தி அந்நாட்டை வழி நடாத்தியவர்
- இசைஞானி இளையராஜா — இந்திய சமுதாயத்தின் மிக ஒடுங்கப்பட்ட ஏழ்மைமிக்க வறிய குடும்பத்தில் பிறந்து இன்று உலகையே மெய்ச்சிலிர்க்க வைக்கும் இசைக் காவியங்களைப் படைத்து வருபவர்.
- நடிகர் ரஜனிகாந்த் — பஸ் கண்டாக்டராகத் தொழில் புரிந்தவர். இன்று தமிழ்த் திரைப்பட உலகில் பலரும் போற்றும் நிலைக்கு உயர்ந்து நிற்பவர்

முல்லாவின் சிரிப்புக் கதை...

கனவும் நனவும்

முல்லா நஸுருதீன் நல்ல வசதியோடு வாழ்ந்து வரும்போது அவரிடம் எப்படியாவது கடன் வாங்க வேண்டுமென்று ஒருவன் எண்ணி வந்தான்.

"முல்லா ! நீங்கள் நேற்றிரவு என் கனவில் தோன்றினீர்கள். என் வறுமை நிலைக்கு வருத்தப்பட்டு, 100 பொன் கொடுத்தீர்கள். கனவு கண்டு எழுந்தவுடன் உங்களைக் காண நான் ஓடோடி வந்தேன். ! என்றான்.

அது கேட்ட முல்லா " அட முட்டாளே ! அவசரப்பட்டு கண் வழித்து விட்டாயே ! இன்னும் தூங்கிமிருந்தால் உன்னிடம் ஈடு வைப்பதற்கு பொருளில்லை என்று நான் அறிந்தவுடன், கொடுத்த 100 பொன்னையும் பிடுங்கி கொள்வதையும் பார்த்திரக்கலாமே. நல்லது இப்பொழுது நான் தந்த அந்தப் பொன்னைத் தந்து விடு " என்று கேட்டார். கடன் பெற வந்தவன் வாய் திறக்காமல் அந்த இடத்தை விட்டு நழுவினான்.

அப்பீலி போடு.. !

கடவுச் சீட்டு (Pasaport)

அறிமுகமானதெப்படி ?



தன் தாய் நாட்டை விட்டு வேறொரு நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போது அந்நியரின் பாதுகாப்புக்காக எழுத்து மூல ஆவனமொன்றை பண்டை எகிப்தியர் வழங்கி வந்தார்கள். அவர்கள். சம்பந்தப்பட்ட நபர் என்ன காரியத்தின் நிமித்தம் வேறு நாட்டிலே நடமாடுகிறார். என குறிப்பிட்ட அரச முத்திரையிடப்பட்ட கடிதம் ஒன்று பயன்படுத்தப்பட்டது.

அண்மைக் காலத்திலே தற்போது பாவனையிலுள்ள போன்ற ஆவணமொன்றை முதன் முதலாக பயன்படுத்தியவர் 5 ஆவது ஹென்றி மன்னவராவார். இது 1414ஆம் காலப்பகுதியிலேயே இங்கிலாந்துக்கு வரும் வெளிநாட்டவரின் பாதுகாப்புக் கருதியே இவ்வாவணம் தயாறிக்கப்பட்டது. இதில் ஹென்றி மன்னரின் கையொப்பம் இடப்பட்டது. இதை வைத்திருக்கும் வெளி நாட்டவர்களுக்கு உள் நாட்டவர்களால் எவ்வித தீங்கும் ஏற்படவில்லை.

பழங்களின் பலகூகள்

கூட்டுப் பழம்	—	வாழைப் பழம்
தனிப் பழம்	—	மாம் பழம்
தாவரம் உள்ள	—	அன்னாசிப் பழம்
வித்துக்கள் நிறைந்த பழம்	—	பப்பாசி பழம்
முட்கள் நிறைந்த பழம்	—	அண்ணாசி, /பலா பழம்/துரியம் பழம்
மூன்று விதைகள் உள்ள பழம்		ஐம்பு பழம்
ஒரு விதைகள் உள்ள பழம்		மாம் பழம்
சிவப்பு நிறப் பழம்		மாதுளம் பழம்
வாசமான பழம்		வசிலாம் பழம்
புளிப்பான பழம்		புளியம் பழம்
உறைப்பான பழம்		மிளகாய் பழம்
முத்துக்கள் உள்ள பழம்		விளாம் பழம்
கொத்துப் பழம்		திராட்சைப் பழம்
சிறிய விதைப் பழம்		ஆலம் பழம்
பல்வகை பயன்கொண்ட பழம்		பனம் பழம்

மாகாணங்களும் தலைநகரும்

மேல் மாகாணம்	—	கொழும்பு
வட மாகாணம்	—	யாழ்ப்பாணம்
வட மத்திய மாகாணம்	—	அநுராத புரம்
வட மேல் மாகாணம்	—	குருநாகல்
தென் மாகாணம்	—	காலி
ஊவா மாகாணம்	—	புதுளை
மத்திய மாகாணம்	—	கண்டி
சப்ரகமுவ மாகாணம்	—	இரத்தினபுரி
கிழக்கு மாகாணம்	—	திருகோணமலை

உதைப்பந்தாட்ட முன்னணி வீரர்களாகத் தெரிவானோர் விபரம் ⇒

2004	ரொனால்டோ	பிரேசில்
2003	சினடின் சிடன்	பிரான்ஸ்
2002	ரொனால்டோ	பிரேசில்
2001	லூயிஸ் பிகோ	போர்த்துக்கள்.
2000	கினடின் சிடன்	பிரான்ஸ்
1999	ரிவால்டோ	பிரேஸில்
1998	சினடின் சிடன்	பிரான்ஸ்
1997	ரொனால்டோ	பிரேசில்
1996	ரொனால்டினோ	பிரேசில்
1995	ஜோர்ஜ்லேயா	லிவேரியா

1994	ரோமேரியயோ	பிரேசில்
1993	ரொபேடோபெகியோ	இத்தாலி
1992	மார்கோவென்பெஸ்டன்	நெதர்லாந்து
1991	லோதர் மதியூஸ்	ஜேர்மனி

— வீராங்கனைகள் —

2004	பிரைட் பிரின்ஸ்	ஜேர்மனி
2003	பிரைட் பிரின்ஸ்	ஜேர்மனி
2002	மியாஹூம்	அமெரிக்கா
2001	மியாஹூம்	அமெரிக்கா

பழமொழிகள்

- அடி பொறுத்தாலும் ஆக்கினைப் பொறுக்க முடியாது
- அணை கடந்து வெள்ளம் வராது
- அமாவாசைச் சோறு என்றைக்கும் அகப்படுமா ?
- அரசன் அன்றறுக்கும் தெய்வம் நின்றறுக்கும்
- அரசனானலும் தாய்கும் மகனே
- அரைக்காசுக்குப் போனமானம்-ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது
- அரைக்காசுக்கு குதிரையும் வேணும், ஆறு கடக்கப் பாயுவும் வேண்டும்
- அரைக்கொத்தரிசி அன்னதானம், விடிய விடிய மேல தாளம்
- அலை மோதும் போதே தலை முழுகு
- அள்ளாதது குறையாது, இல்லாதது பிறவாது
- அற்பனுக்கு பவிசு அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்.

யானைக்கு இத்தனை பெயர்களா ?

- தும்பி,
- நடிகை,
- புகர்முகம்,
- தோல்,
- கரி,
- உம்பல்,
- கயமா,
- பகடு,
- நால்வாய்,
- கரிணி,
- குஞ்சரம்,
- கயமே,
- களபம்,
- மருண்மா
- தந்தி,
- மாதங்கம்,
- ஒருத்தல்
- களிறு,
- சிந்துரம்
- கறையடி,
- அறும்பி,
- வழுவை,
- நாகம்,
- வல்விலங்கு
- வேழம்,
- வாரணம்,
- மதகயம்,
- அத்தி,
- இபம்,
- கும்பி,
- போதகம்,
- உவாவே துாங்கல்,
- மாதிரம்,
- மறமலிகைம்மா
- ஆம்பல்,
- கோட்டுமா
- பிறவும் புழக்கையேடு
- யானை



இதழுக்கு ஒரு நாடு

சிலி

தலைகர் — சந்தியாகோ
சனத்தொகை — 15.6ml
நிலப்பரப்பு — 756,626 Km
மொழி — ஸ்பானிஷ்
நாணயம் — பெஸோ
மதம் — கிறிஸ்தவம்
முக்கிய நகரங்கள் — வல்பரைசோ, அன்டோபகஸ்ட்டா
கல்வியறிவு — 95/-
தலைவர் — ரிகோஸோ லாகோஸ்

ஆய கலைகள் 64-ஆம் எவை ?

01. எழுத்தமில்புக் கலை — அட்சர இலக்கணம்
02. லிகிதக் கலை — எழுத்து ஞானம்
03. கணிதக் கலை — என்னூல்
04. வேதம் — முதல் நூல்
05. புராண இதிகாசம் — பூர்வக் கதை
06. வியாகரணம் — இலக்கணம்
07. ஜோதிட சாஸ்திரம் — வான நூல்
08. தரும சாஸ்திரம் — வான நூல்
09. நீதி சாஸ்திரம் — வான நூல்
10. யோக சாஸ்திரம் — யோக பயிற்சி நூல்
11. மந்திரசாஸ்திரம் — மந்திர நூல்
12. சிற்ப சாஸ்திரம் — சிற்பக் கலைநூல்
13. வைத்திய சாஸ்திரம் — மருத்துவ நூல்
14. உருவ சாஸ்திரம் — உடற்கூற்று இலட்சனம்
15. சப்த பிரம்மம் — ஒலிக்குறிநய நூல்
16. காவியம் — காப்பியம்
17. அலங்காரம் — அணிமிலக்கணம்
18. மதுர பாசாணம் — சொல் வன்மை
19. நாடகம் — கூத்து நூல்
20. நிருத்தம் — நடன நூல்
21. வீணை — மதுரகாண நூல்
22. வேணு கானம் — புல்லாங்குழல் ஊதும் கலை
23. மிருதங்கம் — மத்தள சாஸ்திரம்
24. தாளம் — உப இசை நூல்
25. அஸ்திரப் பயிற்சி — வில்வித்தை சாஸ்திரம்
26. கனகப் பரீட்சை — பொன் மாற்றங்காணும் நூல்
27. ரத பரீட்சை — மகாரத அதிரத சாஸ்திரம்
28. கஜ பரீட்சை — யானை தேர்வு நூல்
29. அஸ்வ பரீட்சை — குதிரை
30. இரத்ன பரீட்சை — நவரத்தின தரவுநூல்
31. பூமி பரீட்சை — மண் வளத் தேர்வு
32. சங்கிராம இலக்கணம் — போர்முறை விதி
33. மல் யுத்தம் — மற்போர்க்கலை
34 மல் யுத்தம் — மற்போர்க் கலை
35 ஆகர்ஷனம் — அணுகுதல்
36.உச்சாடனம் — அகற்றல்
37.வித்வேஷனம் — பகை மூட்டல்
38.மதன சாஸ்திரம் — கோக்கோசம்
39.மோகனம் — மயக்குதல்
40.வசீகரனம் — வசியப்படுதல்
41.இரசவாதம் — பிற உலோகங்களை தங்கமாக மாற்றுதல்.
42.காந்தர் வவாதம் — காந்தங்களைப் பற்றிய இரகசியம்
43.பைபீலா வாதம் — விலங்கு
44.மொழியறிவு
45.கவுத்துவ — துயரத்தை இன்பமாக மாற்றுதல்
46.தூது வாதம் — நாடிநூல்
47.காருடம் — மந்திரதந்தால் விஷமகற்றல்.
48.நஸ்டப் பிரசினம் — ஜோதிடத்தினால் இழப்புக்கல்
49.முட்டி சாஸ்திரம் — ஜோதிடத்தினால் மறைதல்
50.ஆகாயப் பிரவேசம் — விண்ணில் பறத்தல்
51.ஆகாயக் கமனம் — வானில் மறைத்து உலாவுதல்
52.பிரயோகப் பிரவேசம் — கூடுவிட்டு கூடு பாய்தல்
53.அதிருதியம் — தன்னை மறைத்தல்
54.இந்திர ஜாலம் — ஜால வித்தை
55.மகேந்திர ஜாலம் — அதிசயம் காட்டுதல்
56.அக்கினி ஸ்தம்பனம் — நெருப்பைக் காட்டுதல்
58.ஜலதி ஸ்தம்பம் — நீர் மேல் நடத்தல்
59.வாயு ஸ்தம்பம் — காற்றுப் பிடித்தல்
60.வாக்கு ஸ்தம்பம் — வாயைக்கட்டுதல்
61.சுக்கில ஸ்தம்பம் — இந்திரியம்கட்டுதல்
62.கட்க ஸ்தம்பம் — வாள்சுழற்சி
63.அவஸ்தைப் பிரயோகம் — ஆன்மாவை அடக்கல்
64.கீதம் — இசைக் கலை

இங்கிலாந்திடமிருந்து சுதந்திரமடைந்த நாடுகள்

1947 இந்தியா — பாகிஸ்தான்

1948 இலங்கை

1957 கமரூன் — நைஜீரியா

1961 சைப்பிரஸ் — சியராலியோன — தன்சானியா

1962 ஜமேகா — டிரினிடார்ட் — அன்டம்ராபாக்கோ — உகன்டா

1963 கென்யா

1964 மாலாவி — மல்ட்டா — ஸம்பியா

1966 பார்ப்பமோஸ் — பொட்ஸ்வானா — கயானா — லெசோதோ

1968 மொரிசியஸ் — நௌரு — சுவிஸ்

1970 பிஜி — டொங்கோ

1973 பகாமாஸ்

1975 பப்வா நியுகினியா

1976 வேர்ஷேல்ஸ்

1978 சாலமன் தீவுகள் — துவுறு — டொமினிகோ

1979 சென்ட்லூனியா — சென்ட்வின்கென்ட் — கினேனெமிட்

1981 அன்டிகுவாஅன்ட் — பாபுடா பாலிசா

1982 மாலைத் தீவுகள்

1983 சென்ட் கிட்ஸ் — நெவிஸ்

1984 புரூனை

1997 கொங்கொங்

செல்வமும் ~வறுமையும்

அதிக அதிகமாகப் பணத்தைச் சம்பாதித்துக் கொள்வதன் மூலமே சந்தோசத்தையும் வாழ்கையில் அதிக பயனையும் பெற்றுக் கொள்ள முடியும். என்ற நம்பிக்கை எம்மிடையே வலுவடைந்து வருகின்றது. எனவே பணம் சம்பாதிக்கும் முயற்சிகளுக்காக வாழ்கையின் பெரும் பகுதியைச் செலவழித்துவிடத் துணிகின்றோம். இதற்காக குடும்ப வாழ்கையின் சந்தோசங்களைக் கூட செய்துவிட்டுத் தூர தேசங்களில் சென்று தொழில் புரிய முயல்கின்றோம்.

ஆனால் அதிகளவில் பணம் சம்பாதிக்கின்றவன்தான் உண்மையான செல்வந்தனா ? இல்லை! தனதுதேவைகளை முடிந்தளவு குறைத்துக் கொள்வனே உண்மையான செல்வந்தன் என்கின்றனர் அறிஞர் பெருமக்கள். நாம் எமது தேவைகளை அளவுக்கதிகமாக வளர்த்துக் கொளவதன் காரணமாகவே அதிக பணம் சம்பாதிக்க வேண்டும். என்ற நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

எனினும் இவ்வாறு அதிகமாகப் பணத்தை சம்பாதிப்பதற்காக நாம் செய்யும் தியாகங்களின் பெறுமதி சம்பாததிக்கப்படும் பணத்தை விட பலமடங்கு கூடியது. என்பதை நாம் உணரத் தவறி விடுகின்றறோம். சிலர் தம் வாலிபப் பருவத்தையும் ஆரோக்கியத்தையும் அடகு வைத்து பணம் தேடுகின்றனர்.இறுதியில் அவர்கள் வாழத் தொடங்கும்போது அகால முதுமையும் நோயும் அவர்களை ஆட்கொண்டு வருகின்றன.

உலகில் பிறந்து, மனித வர்க்கத்தின் மேம்பாட்டுக்காக உழைத்து அழியாப் புகழ் பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழ்மையான குடும்பங்களிலேயே பிறந்திருக்கின்றனர். என்ற உண்மையை நாம் மறந்து விடக் கூடாது. வீண் ஆடம்பரங்களை தவிர்த்துக் கொண்ட எளிமையான வாழ்கை தான் மேன்மையும் ஆற்றலும் திறமையும் கொண்டவர்களை உற்பத்தி செய்யும் விளைநிலமாக இருக்கின்றது.

வறுமையை ஒழிக்க வேண்டும். என்று நாம் கோஷம் போடுகின்றோம். ஆனால் உண்மையில் ஒழிக்கப்பட வேண்டியது. வீண் ஆடம்பரமே. நேர்மையான சுறுசுறுப்பான, தன்னலமற்ற ஏழ்மைதான் மனித நாகரீகத்தை உச்ச நிலையை அடையச் செய்ய உதவுகின்ற மகத்தான குணங்களை மனிதருள் உருவாக்கக்கூடியதாக இருக்கின்றது.



சிந்தித்து செயலாற்றுங்கள்

- திட்டமிலா செயல்கள் யாவும் நஷ்டத்தையே ஏற்படுத்தும்
- கோபத்தோடு எழுகிறவன் நிச்சயமாக நஷ்டத்தோடு தான் உட்காருவான்.
- ஒரு நொடியில் செய்த தவறு வாழ்நாள் முழுவதும் வேலை தரும்
- அதிகாரத்தால் சாதிக்க முடியாததை அன்பினால் சாதித்து விடலாம்
- நீ அமைதியாக வாழ விரும்பினால் சந்தேகப் பேர்வழியாக இராதே
- கேட்பதையெல்லாம் நம்பாதீர்கள். தெரிந்ததையெல்லாம் சொல்லாதீர்கள்.
- உனக்கு இறைவனைக் காண விருப்பமாயின் மனிதனுக்குத் தொண்டு செய்
- உறுதியைப் போல் உழைப்பும் இருந்தால் நிச்சயம வெற்றி உண்டு
- உன்னிடம் வம்பளப்பவன், நிச்சயம் உன்னைப் பற்றியும் வம்பளப்பான்.
- கோபத்தால் சாதிப்பதை விட பொருமையால் அதிகம் சாதித்து விடலாம்.
- பொறுமையுடன் வாழ்ந்தால் நிச்சயம் பெருமையாக வாழலாம்.
- ஒன்றே செய்க, நன்றே செய்க இன்றே செய்க! வாழ்வில் வெற்றி உண்டு.

நன்றிக் கடன்

அது ஒரு அடர்ந்த காடு, அந்தக் காட்டின் மத்திமில் ஒரு சிறிய பழத்தோட்டம். அதில் ஒரு வேடன் வசித்து வந்தான். அன்றாடம் பழங்களை பறித்து பக்கத்திலுள்ள பட்டணத்திற்கு கொண்டு சென்று விற்று தமக்கு வேண்டிய பொருட்களை வாங்கி வருவது அவனது அன்றாட வழக்கமாக இருந்தது.

அன்று பழங்களை விற்று வரும் வழிமில ஒருவன் பல ஜோடிக் கிளிகளைக் கொண்ட கூடுகளை விற்றுக் கொண்டிருந்தான். வேடன்பார்த்தான் அவன் விற்ற பழங்களில் கிடைத்த பணத்தைக் கொண்டு அத்தனை கூடுகளையும் வாங்கினான். தனது இருப்பிடம் நோக்கி நடந்தான். கிளிகள் தமக்கு என்ன நடக்குமோ என்று பயந்து நடுநடுங்கிக்கொண்டிருந்தன.

தனது இருப்பிடம் சென்ற அவன் கூடுகளைத் திறந்து அத்தனை கிளிகளையும் பறக்கவிட்டான். அன்றிலிருந்து கிளிகள் வேடனுடைய பழத்தோட்டத்திலே தங்கி வாழ்ந்து வந்தன. நாள் போக வயோதிபமடைந்த வேடனால் மரத்திலேறி பழம் பறிக்க முடியவில்லை. அப்பொழுது வேடனால் காப்பாற்றப்பட்ட அக்கிளிகள் பழங்களை பறித்து கூடைகளை நிரப்பின. வயோதிப வேடன் அவற்றை எடுத்துச் சென்று வழக்கம் போல விற்று பணத்தை எடுத்து வாழ்ந்து வந்தான்.

கவிதை ~ஹய்கூ

-யெளவனம்-

உணர்வுகளால்
ஊரிப்பாயும்
சுனாமி..

நவ யுக ம்

நிவாரணமே
இல்லாத
கொடூர
நோய்களுக்கு
சொந்தக்காரன்

-கல்வி-

காட்டு மிருகங்கள்
உன்னிலும்
வேறுபட்டமைக்கு
உன்னத காரணம்

-அன்பு-

மனங்களை
வசீகரமாக்கும்
இயற்கைச்
சூனியம்..

-காலம்-

"பில் கேட்ஸுக்கும்
விலைக்கு
கிடைக்காத
விலை மிகு செல்வம்

-ஆசான்-

இன்றைய
சாதனைகளின்
உமிர் நாடி,
நிகரில்லா
மூலதனம்

காதலர் தினம்

இளம்
இளசுகளின்
இதயக்
கற்பழிப்பு ..

-பூக்கள்-

பாடல்வரிகளின் அழகுச்
சொல்,
கவிதைகளின்
கோலங்கள்,
ஆனந்தத்தின்
வாசனை,
மங்கைகளின்
சுவாசனை.

விடியல்

யமன் ஏட்டினிலே
இன்று எத்தனை
ஆத்மாக்களுக்கு என்ன
கதியோ..!

-திருமணம் -

சுதந்திர
நினைவுகளிலும்
கனவுகளிலும்,
துனையாக வருகிறது
ஓர் நாதி

Quiz corner No -2

01. கனடா நாட்டின் பிரதமர் யார் ?
02. 2004 இல் யூரோ கிண்ணத்தை வென்ற நாடு ?
03. சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகம் யார் ?
04. நேபாளத்தின் தேசிய விலங்கு யாது ?
05. இமய மலை அமைந்துள்ள இடம் எது ?
06. இலங்கையின் சபா நாயகர் யார் ?
07. இலங்கையின் தேசிய மலர் எது ?
08. 2004 — 06 — 05 அன்று பிரமலமான ஒரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ரெனோல்ட் ரெகன் காலமானார். இவர் எந்நாட்டைச் சேர்ந்தவர் ?
09. பாகிஸ்தானின் 1 ஆவது பெண் பிரதமர் யார் ?
10. உலக சுகாதார தினம் எப்போது கொண்டாட்டப் படும் ?

சரியான விடைகளை உங்களது பெயர் முகவரியுடன், கீழ்வரும் கூப்பனை வெட்டி ஒட்டி அனுப்பி வைக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 30 — ~~04~~ 06 — 2005

கூப்பன் ஒட்டி அனுப்பாத ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மூவருக்கு பெறுமதி வாய்ந்த பரிசு வழங்கப்படும்.

10 பேர்களின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படுவதோடு அடுத்த இதழ் இலவசமாக வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய கூப்பன்

Quiz Corner No -02
புதுமை
Paper House
Water Tank Rd.
Dickwella